KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.29

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

சங்க இலக்கிய எட்டுத்தொகையில் குறிஞ்சி நில வாழ்வியல் கூறுகள்

Elements of Kurinji Landscape Lifestyle in Sangam Literature's Ettuthokai

ச. மோனலிசா[1,*], முனைவர் சே. கல்பனா[2]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

[2] உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

***Corresponding author:** ச. மோனலிசா, Monarkmn08@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 5 October 2026
Revised: 11 October 2026
Accepted: 15 October 2026

Article ID
KIJTS-2026-0003

Peer review
Double-blind peer review

Keywords
Natrinai
Kuruntokai
Aingurunuru
Padirruppattu
Paripatal
Kalittokai
Akananuru

ABSTRACT

Sangam literature stands as rare literary evidence depicting the lifestyles, cultural elements, and close relationship with nature of the ancient Tamils. In particular, the Ettuthokai (Eight Anthologies) texts record the lifestyle, occupation, food, kinship, worship, romantic conduct, and social customs of the people of that era from various perspectives.

The tradition of categorizing and explaining Tamil lifestyle into Ainthinai (five landscapes) based on land is found in Tolkappiyam. Among them, the mountains and the surrounding region are designated as Kurinji Thinai. The Kurinji land is not merely a geographical area; it also functions as a cultural space encompassing the occupation, food, worship, nature-based beliefs, and romantic lives of the people who lived in that region.

Information related to the Kurinji landscape appears in numerous places across the Ettuthokai texts—namely Natrinai, Kuruntokai, Aingurunuru, Padirruppattu, Paripatal, Kalittokai, and Akananuru. Particularly in the interior (Akam) poems, the mountainous natural environment and the daily lives of the people are subtly revealed through the statements of the hero, heroine, and the heroine's companion.

In this research, elements such as the natural setting of the Kurinji land, flora and fauna resources, economic livelihood, social structure, worship methods, interior tradition (Aka-marabu), cultural artifacts, and linguistic style are analyzed based on the songs of Ettuthokai.

How to cite this article: ச. மோனலிசா, & முனைவர் சே. கல்பனா (2026). சங்க இலக்கிய எட்டுத்தொகையில் குறிஞ்சி நில வாழ்வியல் கூறுகள். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 111–121. https://doi.org/10.63300/tmi12n062026.13
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முன்னுரை

சங்க இலக்கியங்கள் பழந்தமிழர்களின் வாழ்க்கை முறைகளையும், பண்பாட்டுக் கூறுகளையும், இயற்கையோடு அவர்கள் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பையும் எடுத்துரைக்கும் அரிய இலக்கியச் சான்றுகளாகத் திகழ்கின்றன. குறிப்பாக, எட்டுத்தொகை நூல்கள் அக்கால மக்களின் வாழ்வியல், தொழில், உணவு, உறவுமுறை, வழிபாடு, காதல் ஒழுக்கம், சமூகப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைப் பல்வேறு கோணங்களில் பதிவு செய்துள்ளன.

தமிழர் வாழ்வியலை நிலத்தின் அடிப்படையில் ஐந்திணைகளாகப் பகுத்து விளக்கும் மரபு தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. அவற்றுள் மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சித் திணையாகக் குறிப்பிடப்படுகின்றன. குறிஞ்சி நிலம் என்பது வெறும் புவியியல் பகுதி மட்டுமன்று; அந்நிலத்தில் வாழ்ந்த மக்களின் தொழில், உணவு, வழிபாடு, இயற்கை சார்ந்த நம்பிக்கைகள், காதல் வாழ்க்கை ஆகியவற்றை உள்ளடக்கிய பண்பாட்டுக் களமாகவும் விளங்குகிறது.

எட்டுத்தொகை நூல்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, ஆகியவற்றில் குறிஞ்சி நிலம் தொடர்பான செய்திகள் பல இடங்களில் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, அகப்பாடல்களில் தலைவன், தலைவி, தோழி ஆகியோரின் கூற்றுகளின் வழியாக மலைநாட்டு இயற்கைச் சூழலும், மக்களின் அன்றாட வாழ்க்கையும் நுட்பமாக வெளிப்படுகின்றன.

இவ்வாய்வில் குறிஞ்சி நிலத்தின் இயற்கை அமைப்பு, தாவர மற்றும் விலங்கு வளங்கள், பொருளாதார வாழ்வாதாரம், சமூக அமைப்பு, வழிபாட்டு முறைகள், அகமரபு, பண்பாட்டுப் பொருள்கள், மொழிநடை ஆகிய கூறுகள் எட்டுத்தொகைப் பாடல்களின் அடிப்படையில் ஆராயப்படுகின்றன.

1. நில அமைப்பும் சூழலியல் கட்டமைப்பும்

1.1 புவியியல் நிலப்பரப்பும் காலச்சூழலும்

குறிஞ்சித் திணை என்பது மலையும் மலை சார்ந்த பகுதிகளைக் குறிக்கிறது. உயர்ந்த மலைகள், மலைச்சாரல்கள், அருவிகள், சுனைகள், குகைகள், பாறைகள், குறுகிய மலைப்பாதைகள் ஆகியவை இந்நிலத்தின் இயற்கை அடையாளங்களாக அமைகின்றன. மலைப்பகுதிகளில் நிலவும் குளிர்ச்சியான சூழல், பனிப்பொழிவு, மேகமூட்டம், மழை ஆகியவை அப்பகுதியின் இயற்கைத் தன்மையை உருவாக்குகின்றன.

குறிஞ்சி நிலத்தின் இயற்கைச் சூழல் மனிதர்களின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்புடையதாக இருந்தது. மலைப்பகுதியில் வாழ்ந்த மக்கள் இயற்கையின் வளங்களைப் பயன்படுத்தித் தங்களுடைய உணவு மற்றும் வாழ்வாதாரத் தேவைகளை நிறைவு செய்தனர். மலைகளில் கிடைத்த கிழங்குகள், காய்கள், கனிகள், தேன் போன்றவை அவர்களின் உணவுப் பயன்பாட்டில் இடம் பெற்றன.

குறிஞ்சி நிலத்தின் இயற்கைச் சிறப்பை குறுந்தொகை மூன்றாம் பாடல் எடுத்துரைக்கிறது.

“நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று

நீரினும் ஆரள வின்றே சாரல்

கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு

பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.” (குறுந்தொகை பா. 3)

இப்பாடலில் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையிலான நட்பின் ஆழம் இயற்கைச் சூழலோடு ஒப்பிடப்படுகிறது. நிலத்தைவிடப் பெரியதாகவும், வானத்தைவிட உயர்ந்ததாகவும், நீரைவிட ஆழமானதாகவும் காதல் உறவு சுட்டப்படுகிறது. கரிய அடியைக் கொண்ட குறிஞ்சிப் பூக்களிலிருந்து தேனைச் சேகரிக்கும் தேனீக்கள் நிறைந்த மலைநாடு இப்பாடலில் இடம்பெறுகிறது. இதன் வழியாகக் குறிஞ்சி நிலத்தின் இயற்கை வளமும், அங்கு காணப்பட்ட தேனீக்களின் செயல்பாடும், மலைநாட்டின் சிறப்பும் வெளிப்படுகின்றன. இயற்கை என்பது மனித வாழ்வின் பின்னணியாக மட்டுமல்லாமல், மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் இலக்கியக் குறியீடாகவும் அமைந்துள்ளது.

1.2 தாவரவியல் வளம்

குறிஞ்சி நிலம் பல்வேறு மரங்கள், செடிகள், கொடிகள், மலர்கள் ஆகியவற்றைக் கொண்ட இயற்கை வளமிக்க பகுதியாக விளங்கியது. வேங்கை, சந்தனம், அகில், மூங்கில், பலா போன்ற மரங்கள் மலைப்பகுதிகளில் காணப்பட்டன. குறிஞ்சி மலர் இந்நிலத்தின் அடையாள மலராகக் கருதப்படுகிறது.

மலைச்சாரல்களில் வளர்ந்த மரங்கள் மற்றும் செடிகள் மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்பட்டன. மரங்களிலிருந்து கிடைத்த பொருள்கள், காய்கள், கனிகள், தேன், கிழங்குகள் ஆகியவை உணவுத் தேவைகளுக்குப் பயன்பட்டன. சில தாவரங்கள் மருத்துவப் பயன்பாட்டையும் கொண்டிருந்தன. வேங்கை மலர்தல் குறிஞ்சி நில வாழ்வியலில் ஒரு முக்கியமான இயற்கை நிகழ்வாகப் பாடல்களில் சுட்டப்படுகிறது. வேங்கை மலர்தலைத் தலைவியின் காதல் வாழ்க்கையில் நிகழும் காலமாற்றத்தோடும், திருமணத்தை நோக்கிய எதிர்பார்ப்போடும் இணைத்துக் கூறும் மரபு அகப்பாடல்களில் காணப்படுகிறது. இதனால், குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கையில் தாவர வளம் உணவு, தொழில், அழகு, பண்பாடு ஆகிய பல நிலைகளில் தொடர்புடையதாக இருந்தது என்பதை அறியலாம்.

1.3 விலங்கினங்களும் மனித–இயற்கை உறவும்

குறிஞ்சி நிலத்தில் யானை, புலி, கரடி, மான், குரங்கு, மயில், கிளி போன்ற விலங்குகளும் பறவைகளும் வாழ்ந்தன. இவ்விலங்குகள் சங்கப்பாடல்களில் இயற்கைச் சூழலின் ஓர் அங்கமாக இடம்பெறுகின்றன.

மலைப்பகுதியில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை விலங்குகளோடு நெருங்கிய தொடர்புடையதாக இருந்தது. வேட்டையாடுதல், விலங்குகளிடமிருந்து பயிர்களைக் காத்தல், விலங்குகளின் நடமாட்டத்தைக் கவனித்தல் போன்ற செயல்கள் அன்றாட வாழ்க்கையில் இடம்பெற்றிருக்கலாம். குறிப்பாக, தினைப்புனங்களில் கிளிகள் வந்து தானியங்களைக் கொத்துவதால் அவற்றை விரட்டிக் காக்க வேண்டிய நிலை இருந்ததை,

“சுடுபுன மருங்கிற் கலித்த வேனற்

படுகிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே” (குறுந்தொகை, 291)

குறுந்தொகை பாடலின் வழி அறியலாம்.

குறிஞ்சிப் பாடல்களில் விலங்குகள் வெறும் இயற்கைக் காட்சிகளாக மட்டும் வருவதில்லை. அவை தலைவன் செல்லும் மலைப்பாதையின் ஆபத்தையும், தலைவி எதிர்கொள்ளும் அச்சத்தையும், காதலர்களின் சந்திப்புச் சூழலையும் வெளிப்படுத்துகின்றன. இதனால் இயற்கை, மனித உணர்வு, சமூக வாழ்க்கை ஆகியவை ஒன்றோடொன்று இணைந்திருப்பது புலனாகிறது.

2. பொருளாதார வாழ்வாதாரக் கட்டமைப்பு

2.1 வேட்டைப் பொருளியலும் கூட்டுழைப்பும்

குறிஞ்சி மக்களின் மிகத் தொன்மையான வாழ்வாதாரம் வேட்டையாடுதலாகும். தாணவரக்ள வில், கொடுவரி அம்பு மற்றும் வேட்டை நாய்களின் துணையோடு காடுகளுக்குள் சென்றனர். வயலில் விளைந்த திணையைக் கவர்ந்த காடடுப்பன்றியை கல் குவியலுக்குள் மறைத்து வைத்திருந்த வில்லினைக் கொண்டு வேட்டையாடினர். இதனை,

“பிணர்ச் சுவர் பன்றி தோல்முலைப் பிணவொடு

கணைக் கால் ஏனல் கைம்மிகக் கவர்தலின்

கல் அதர் அரும் புழை அல்கி கானவன்

வில்லின் தந்த வெண்கோட்டு ஏற்றை

புனைஇருங் ததும்பின் மனையோள் கெண்டி

குடிமுறை பகுக்கும் நெடுமலை நாட,” (நற்றிணை, பா. 336)

இப்பாடலில் வேட்டையில் கிடைத்த இறைச்சியை வீட்டிற்கு கானவர் எடுத்துச் செல்வர் அதனை மனையாள் சமைத்து தன்னைச் சேர்ந்த குடிகளுக்கு சமமகாகப் பங்கிட்டுத் தருவாள். தனிமனிதச் சேமிப்பு அல்லது சொத்துடைமை உருவாகாத அக்காலக் கட்டத்தில், கூட்டு உழைப்பும் கூட்டுப் பகிர்வுமே (Communal Sharing) சமூக வாழ்வின் முதன்மை விதியாக இருந்தது.

2.2 கொல்லைப் பயிரீடும் தினை உற்பத்தியும்

குறிஞ்சி நில மக்களின் உணவுப் பொருளாதாரத்தில் தினை முக்கிய இடம் பெற்றது. மலைச்சாரல்களிலும் நில அமைப்புக்கு ஏற்ற இடங்களிலும் பயிரிடப்பட்ட தானியங்களில் தினை குறிப்பிடத்தக்கது. ஐவன நெல் போன்ற பயிர்களும் சங்க இலக்கியங்களில் குறிஞ்சி நிலத்தோடு தொடர்புபடுத்தப்படுகின்றன. மலைப்பகுதியில் நிலத்தின் தன்மைக்கு ஏற்ப பயிரிடும் முறைகள் மாறுபட்டன. குறிஞ்சி நிலத்தில் தினைப்பயிர் வளர்த்தல், அவற்றைப் பாதுகாத்தல், அறுவடை செய்தல் போன்ற பணிகள் மக்களின் உழைப்பைச் சார்ந்திருந்தன. தினைப்பயிர் முற்றி விளையும் காலம் மக்களின் வாழ்வில் முக்கியமான காலமாக இருந்தது. பயிர் விளைச்சலைக் காப்பது, பறவைகள் மற்றும் விலங்குகளிடமிருந்து பாதுகாப்பது போன்ற செயல்கள் அன்றாட வாழ்க்கையில் இடம்பெற்றன. இதனால், குறிஞ்சி நில மக்களின் பொருளாதாரம் வேட்டைத் தொழிலுடன் மட்டுப்படாமல் பயிரிடுதல் மற்றும் உணவு உற்பத்தி ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக இருந்ததை அறியலாம்.

2.3 பெண்களின் உழைப்பும் தினைப்புனக் காவலும்

தினைப்பயிரைக் காப்பதில் பெண்களும் பங்காற்றினர். தினைப்புனங்களில் கிளிகள் வந்து கதிர்களைக் கொத்துவதால் அவற்றை விரட்டுவதற்காகப் பெண்கள் காவல் காத்தனர். கவண், தட்டை போன்ற கருவிகள் மூலம் ஓசை எழுப்பிப் பறவைகளை விரட்டினர்.

இச்செயல் பெண்களின் உழைப்பையும், குடும்பப் பொருளாதாரத்தில் அவர்களுடைய பங்களிப்பையும் வெளிப்படுத்துகிறது. தினைப்புனக் காவல் என்பது வெறும் வேளாண் பணியாக மட்டுமல்லாமல், அகப்பாடல்களில் தலைவன் தலைவியைச் சந்திக்கும் சூழலாகவும் அமைந்துள்ளது.

“துய்த் தலைப் புனிற்றுக் குரல் பால் வார்பு இறைஞ்சி,

தோடு அலைக் கொண்டன ஏனல் என்று,

துறு கல் மீமிசைக் குறுவன குழீஇ,

செவ் வாய்ப் பாசினம் கவரும் என்று, அவ் வாய்த்

தட்டையும் புடைத்தனை, கவணையும் தொடுக்க' என

எந்தை வந்து உரைத்தனனாக, அன்னையும்,

'நல் நாள் வேங்கையும் மலர்கமா, இனி' என

என் முகம் நோக்கினள்; எவன்கொல்? தோழி!

செல்வாள் என்றுகொல்? 'செறிப்பல்' என்றுகொல்?

கல் கெழு நாடன் கேண்மை

அறிந்தனள்கொல்? அஃது அறிகலென் யானே!” (நற்றிணை பா. 206)

என்னும் நற்றிணைப் பாடலில் தினைக்கதிர்கள் முற்றி வளைந்து நிற்கும் காட்சி எடுத்துரைக்கப்படுகிறது. தினைப்பயிரைக் கிளிகள் கவராமல் பாதுகாக்கத் தட்டை

மற்றும் கவண் பயன்படுத்தப்படுவதைப் பாடல் சுட்டுகிறது. இதன் மூலம் தினைப்புனக் காவல் குறிஞ்சி நில மக்களின் வாழ்வில் முக்கியமான செயலாக இருந்தது தெரியவருகிறது. மேலும், தலைவியின் தந்தை தினைப்புனக் காவல் தொடர்பான பணியைச் சொல்லுவதும், தாய் வேங்கை மலர்வதை எதிர்பார்ப்பதும் குடும்ப வாழ்க்கை மற்றும் காதல் ஒழுக்கத்தோடு இயற்கைச் சூழல் இணைந்திருப்பதை உணர்த்துகின்றன.

2.4 சேகரிப்புப் பொருளாதாரமும் பண்டமாற்று முறையும்

குறிஞ்சி நிலத்தில் தேன் சேகரித்தல், கிழங்குகளை அகழ்தல், கனிகளைப் பறித்தல் போன்ற இயற்கைச் சேகரிப்பு நடவடிக்கைகள் வாழ்வாதாரத்தின் ஒரு பகுதியாக இருந்தன. மலைப்பகுதிகளில் கிடைத்த தேன், கிழங்கு, கனி போன்றவை உணவுத் தேவைகளை நிறைவு செய்தன.

குறிஞ்சி நிலத்தில் கிடைத்த தேன், கிழங்கு போன்ற பொருட்களை கொடுத்து அதற்கு ஈடாக நேய்தல்நிலத்து மீன் நெய்யையும் கள்ளையும் பெற்றுள்ளனர் எனபதை,

“தேன்நெய்யொடு கிழங்கு மாறியோர்

மீன்நெய்யொடு நறவு மறுகவும்” (பொருநர் ஆற்றுப்படை, வரி. 214-215)

என பொருநராற்றுபடை பாடலின் வழியாக குறிஞ்சி நிலத்தில் நடைபெற்று பண்டமாற்று முறையை அறியமுடிகிறது. இத்தகைய பரிமாற்றம் அக்கால மக்களிடையே உள்ள பொருளாதாரத் தொடர்பினை அறியலாம். ஆனால், ஒவ்வொரு பொருளும் எந்த அளவில், எந்த முறையில் பரிமாறப்பட்டது என்பதைத் தெளிவாகக் காட்டும் சான்றுகள் தனித்தனியாக ஆராயப்பட வேண்டும். எனவே, பண்டமாற்று முறையைப் பற்றிய கருத்துகள் இலக்கியச் சான்றுகளின் வரம்பிற்குள் வைத்தே விளக்கப்பட வேண்டும்.

3. சமூக அமைப்பும் அதிகாரப் படிநிலைகளும்

3.1 தலைமைப் பண்பும் சமூக உறவுகளும்

குறிஞ்சி நில அகப்பாடல்களில் மலைநாட்டுத் தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய் போன்ற பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. இவை அக்கால மக்களின் குடும்ப மற்றும் சமூக உறவுகளைப் புரிந்துகொள்ள உதவுகின்றன.

தலைவன் மலைநாட்டைச் சேர்ந்தவனாகவும், தலைவி அந்நிலத்தின் இயற்கைச் சூழலோடு தொடர்புடையவளாகவும் சித்தரிக்கப்படுகிறாள். தலைவன் தலைவியைச் சந்திப்பதற்காக மலைப்பாதைகளைக் கடந்து வருகிறான். தோழி காதலர்களுக்கிடையே செய்தி பரிமாறுபவளாகவும், தலைவியின் உணர்வுகளைப் புரிந்துகொள்பவளாகவும் செயல்படுகிறாள். இப்பாத்திரங்களின் வழியாக அக்கால சமூகத்தில் காதல் உறவுகள், குடும்பப் பொறுப்புகள், திருமண எதிர்பார்ப்புகள், சமூகக் கட்டுப்பாடுகள் ஆகியவை வெளிப்படுகின்றன.

3.2 குடும்ப அமைப்பும் பெண்களின் நிலையும்

குறிஞ்சி நில அகப்பாடல்களில் தாய், தந்தை, மகள், தோழி ஆகியோரின் உறவுகள் விரிவாகப் பதிவாகியுள்ளன. தலைவியின் காதல் வாழ்க்கையில் தாயின் கவனிப்பும், தந்தையின் பாதுகாப்பும், தோழியின் துணையும் முக்கியமானவையாக அமைகின்றன.

தலைவி காதல் நோயால் உடல் மெலிவதைப் பெற்றோர் கவனிக்கின்றனர். ஆனால் அதன் உண்மையான காரணத்தை அறியாமல் வேறு காரணங்களைக் கருதும் சூழலும் பாடல்களில் இடம்பெறுகிறது. இதன் மூலம் பெண்களின் உணர்வுகள் குடும்பத்தின் கண்காணிப்பிற்குள் இருந்ததையும், தோழி அவர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் இடைத்தரகராகச் செயல்பட்டதையும் அறியலாம். எனினும், இப்பாடல்களின் அடிப்படையில் குறிஞ்சி நிலத்தில் தாய்வழிச் சமூக அமைப்பு முழுமையாக நிலவியது என்று பொதுவான முடிவுக்கு வர இயலாது. பாடல்களில் வெளிப்படும் குடும்ப உறவுகளையும் சமூக அமைப்பையும் தனித்தனியாக ஆராய்வதே பொருத்தமானது.

4. தொல்சமயச் சடங்குகளும் வழிபாட்டு முறைகளும்

4.1 சேயோன் வழிபாடு

குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாகச் சேயோன் அல்லது முருகன் குறிப்பிடப்படுகிறார். மலை, வேல், வேலன், வெறியாட்டு, குறிஞ்சி மலர் போன்ற கூறுகள் முருக வழிபாட்டோடு தொடர்புடையனவாகக் குறிஞ்சித் திணைப்பாடல்கள் பதிவுசெய்கின்றன.

“பல்வேறு உருவின் சில்அவிழ் மடையொடு

சிறுமறி கொன்று இவள் நறுநுதல் நீதி

வணங்கிளை கொடுத்தி ஆயில் அணங்கிய

விண்தோய் மாமலைச் சிலம்பன்” (குறுந்தொகை, பா. 362)

தலைவனின் பிரிவால் தலைவி உடல் மெலிந்தாள். அவள் உடல் வேறுபாட்டைக் கண்டதாய் வேலனை அழைத்து தலைவியின் நோய்க்குக் காரணத்தை அறிந்துகொண்டு அதற்கு பரிகாரம் செய்வதற்காக வெறியாட்டு நடத்துகிறாள். தினை அரிசி சோற்றுடன், குருதியைக் கலந்து பல பண்ணியங்களோடு வேலனுக்குப் பலியிடுதலும், ஆட்டின் குட்டியை பலியிட்டு, அதன் குருதியை தலைவியின் நெற்றியில் தடவி முருகக் கடவுளை வணங்கி வெறியாட்டு நிகழ்த்தினர்.

மலைப்பகுதியில் வாழ்ந்த மக்களின் சமய நம்பிக்கைகள் இயற்கைச் சூழலோடு தொடர்புடையதாக இருந்தன. மலைகள், அருவிகள், காடுகள் போன்றவை தெய்வீக ஆற்றல் கொண்ட இடங்களாகக் கருதப்பட்டன. முருகன் மலைநிலத்தின் தெய்வமாகப் போற்றப்பட்டார்.

4.2 வெறியாட்டுச் சடங்கு

தலைவி காதல் நோயால் உடல் மெலிந்து வருந்தும்போது, அதன் காரணத்தை அறியாத தாய் அது தெய்வத்தால் ஏற்பட்ட வருத்தமாக இருக்கலாம் என்று கருதுகிறாள். இதற்குத் தீர்வு காண வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்தும் மரபு சங்க அகப்பாடல்களில் இடம்பெறுகிறது. வெறியாட்டில் வேலன், முருகன் வழிபாடு, பலி கொடுத்தல், செந்தினைத் தூவுதல், பாடுதல், ஆடுதல் போன்ற சடங்குக் கூறுகள் இடம்பெறுகின்றன.

“அணங்குடை நெடு வரை உச்சியின் இழிதரும்

கணம் கொள் அருவிக் கான் கெழு நாடன்

மணம் கமழ் வியல் மார்பு அணங்கிய செல்லல்

இது என அறியா மறுவரல் பொழுதில்

.....

.....

நோய் தணி காதலர் வர, ஈண்டு

ஏதில் வேலற்கு உலந்தமை கண்டே?” (அகநானூறு, பா. 22)

இப்பாடலில் தலைவியின் உடல் மெலிவிற்குக் காரணம் காதல் என்பதை அறியாத தாய், முருகனால் ஏற்பட்ட தெய்வீகத் துன்பம் என்று கருதுகிறாள். அதற்காக வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்த ஏற்பாடு செய்கிறாள். களம் அமைத்தல், கண்ணி சூட்டுதல், பாடுதல், பலி கொடுத்தல், செந்தினையைக் குருதியுடன் தூவுதல் போன்ற சடங்குகள் பாடலில் விவரிக்கப்படுகின்றன. இதன் வழியாகக் குறிஞ்சி நில மக்களின் முருக வழிபாட்டு நம்பிக்கையும், வெறியாட்டுச் சடங்கின் கூறுகளும் தெளிவாக வெளிப்படுகின்றன. மேலும், காதல் உணர்வுக்கும் சமய நம்பிக்கைக்கும் இடையே நிலவிய தொடர்பையும் இப்பாடல் வெளிப்படுத்துகிறது.

4.3 அணங்கு பற்றிய நம்பிக்கை

சங்க இலக்கியங்களில் அணங்கு என்பது அச்சத்தையும் வருத்தத்தையும் ஏற்படுத்தும் தெய்வீக ஆற்றலாகக் குறிப்பிடப்படுகிறது. மலை, அருவி, காடு போன்ற இயற்கை இடங்களோடு அணங்கு பற்றிய நம்பிக்கைகள் தொடர்புபடுத்தப்படுகின்றன.

மனிதர்களுக்கு ஏற்படும் உடல் மற்றும் மன வருத்தங்களுக்குக் காரணமாகத் தெய்வீக ஆற்றல்கள் கருதப்பட்ட சூழல் சங்கப்பாடல்களில் பதிவாகியுள்ளது. இத்தகைய நம்பிக்கைகள் அக்கால மக்களின் உலகப் பார்வையையும் சமய உணர்வையும் வெளிப்படுத்துகின்றன.

5. அகமரபும் காதல் வாழ்க்கையும்

5.1 களவொழுக்கம்

குறிஞ்சித் திணையின் உரிப்பொருள் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் ஆகும். தலைவன், தலைவி ஆகியோருக்கிடையே திருமணத்திற்கு முன்பாக நிகழும் காதல் உறவு களவொழுக்கம் எனப்படுகிறது.

குறிஞ்சி நிலத்தின் இயற்கைச் சூழல் காதலர்களின் சந்திப்புக்கு ஏற்ற பின்னணியாக அமைந்துள்ளது. மலைப்பாதைகள், தினைப்புனங்கள், அருவிகள், குகைகள், இரவு நேரம் ஆகியவை காதல் நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தப்படுகின்றன.

தலைவன் தலைவியைச் சந்திக்க வருதல், தலைவி அவனை எதிர்பார்த்துக் காத்திருத்தல், தோழி இருவருக்கும் துணைநிற்றல் போன்ற நிகழ்வுகள் அகப்பாடல்களில் இடம்பெறுகின்றன.

5.2 பகற்குறியும் இரவுக்குறியும்

காதலர்கள் சந்திக்கும் இடமும் நேரமும் அக இலக்கியங்களில் குறியிடமாகக் குறிப்பிடப்படுகின்றன. பகலில் சந்திப்பது பகற்குறி என்றும், இரவில் சந்திப்பது இரவுக்குறி என்றும் வழங்கப்படுகிறது.

குறிஞ்சி நிலத்தில் மலைப்பாதைகள் இரவு நேரத்தில் ஆபத்தானவையாக அமைகின்றன. யானை, புலி, கரடி போன்ற விலங்குகளின் நடமாட்டமும், இருள் சூழ்ந்த பாதைகளும் தலைவிக்கு அச்சத்தை ஏற்படுத்துகின்றன. இதனால் தலைவன் இரவில் வருவதைத் தலைவி விரும்பினாலும், அவனுடைய பாதுகாப்பைப் பற்றிய கவலை அவளிடம் காணப்படுகிறது.

“யாயே, கண்ணினும் கடுங் காதலளே;

எந்தையும், நிலன் உறப் பொறாஅன்; 'சீறடி சிவப்ப,

எவன், இல! குறுமகள்! இயங்குதி?' என்னும்;

யாமே, பிரிவு இன்று இயைந்த துவரா நட்பின்,

இரு தலைப் புள்ளின் ஓர் உயிரம்மே;

ஏனல் அம் காவலர் ஆனாது ஆர்த்தொறும்,

கிளி விளி பயிற்றும் வெளில் ஆடு பெருஞ் சினை,

விழுக் கோட் பலவின் பழுப் பயம் கொண்மார்,

குறவர் ஊன்றிய குரம்பை புதைய,

வேங்கை தாஅய தேம் பாய் தோற்றம்,

புலி செத்து, வெரீஇய புகர்முக வேழம்,

மழை படு சிலம்பில் கழைபட, பெயரும்

நல் வரை நாட! நீ வரின்,

மெல்லியல் ஒரும் தான் வாழலளே.” (அகநானூறு, பா. 12)

இப்பாடலில் தலைவியின் தாய் அவளை மிகவும் அன்போடு பாதுகாப்பதும், தந்தை அவளுடைய சிறிய பாதங்கள் சிவப்பதைக்கூடப் பொறுக்காதவராக இருப்பதும் கூறப்படுகிறது. அதேவேளையில், தலைவனும் தலைவியும் பிரிக்க முடியாத உறவைக் கொண்டிருப்பதாகத் தலைவி உணர்கிறாள்.

தினைப்புனத்தைக் காக்கும் காவலர்கள் எழுப்பும் ஒலியால் கிளிகள் அச்சமடையும் காட்சி, மலைப்பகுதியில் காணப்படும் பலா மரங்கள், வேங்கை மரங்கள், யானைகள், புலிகள் ஆகிய இயற்கைக் கூறுகள் பாடலில் இடம்பெறுகின்றன. தலைவன் வருகை தந்தால்தான் தலைவி உயிர்வாழ முடியும் என்ற காதல் உணர்வும் வெளிப்படுகிறது. இதன் மூலம் குறிஞ்சி நிலத்தின் இயற்கைச் சூழலும் காதல் வாழ்க்கையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருப்பது தெளிவாகிறது.

5.3 அறத்தொடு நிற்றல்

களவொழுக்கத்தில் தலைவன், தலைவி ஆகியோரின் காதல் நீண்டகாலம் தொடரும்போது சமூகத்தில் அலர் எழும் வாய்ப்பு உள்ளது. இதனால் காதலைத் திருமண உறவாக மாற்ற வேண்டிய சூழல் உருவாகிறது. தலைவியின் காதல் உணர்வைத் தாய் மற்றும் செவிலித்தாயிடம் வெளிப்படுத்துவதில் தோழி முக்கியப் பங்கு வகிக்கிறாள். தலைவியின் காதலை மறைக்காமல், அதனை ஏற்றுக்கொள்ளத்தக்க முறையில் வெளிப்படுத்தும் செயல் அறத்தொடு நிற்றல் எனப்படுகிறது.

“மென் தோள் நெகிழ்த்த செல்லல் வேலன்

வென்றி நெடுவேள் என்னும் அன்னையும்

அது என உணரும் ஆயின் ஆயிடை

கூழை இரும் பிடி கை கரந்து அன்ன

கேழ் இரும் துறுகல் கெழு மலை நாடன்

வல்லே வருக தோழி நம்

இல்லோர் பெரு நகை காணிய சிறிதே.” (குறுந்தொகை, பா. 111)

இப்பாடலில் தலைவியின் தோள்கள் மெலிவதற்குக் காரணம் காதல் என்பதை அறியாத தாய், முருகனால் ஏற்பட்ட துன்பம் என்று கருதுகிறாள். வேலன் மூலம் வெறியாட்டு நிகழ்த்தினால் தலைவியின் துன்பம் நீங்கும் என்று எண்ணுகிறாள். ஆனால் தலைவி தனது காதல் உணர்வைத் தோழியிடம் வெளிப்படுத்துகிறாள். தலைவன் விரைவில் வந்து தாயும் வீட்டாரும் மேற்கொள்ளும் வெறியாட்டு ஏற்பாடுகளைக் கண்டு சிரிக்கும்படி நிகழ்வு அமைய வேண்டும் என விரும்புகிறாள்.

இப்பாடல் காதல் உணர்வு, தாயின் நம்பிக்கை, தோழியின் துணை, வேலன் வெறியாட்டு ஆகியவற்றை ஒரே நிகழ்வில் இணைத்துக் காட்டுகிறது. குறிஞ்சி நில மக்களின் அக வாழ்க்கையையும் சமய நம்பிக்கையையும் புரிந்துகொள்ள இப்பாடல் உதவுகிறது.

6. இனவரைவியல் கூறுகளும் பண்பாட்டுப் பொருள்களும்

குறிஞ்சி நில மக்களின் வாழ்வியலை இலக்கிய நோக்கில் மட்டுமல்லாமல், இனவரைவியல் நோக்கிலும் ஆராய முடியும். அவர்களின் உணவு, உடை, அணிகலன், தொழில், குடியிருப்பு, கருவிகள், வழிபாடு, சமூக உறவுகள் ஆகியவை பண்பாட்டு அடையாளங்களாக அமைகின்றன.

6.1 வாழ்விடமும் குடியிருப்பும்

மலைச்சாரல்கள், குன்றுகள், பாறைகள், குகைகள் ஆகியவை குறிஞ்சி நில மக்களின் வாழ்விடச் சூழலை உருவாக்கின. மலைப்பகுதியின் இயற்கை அமைப்புக்கு ஏற்ப குடியிருப்புகள் அமைந்திருந்தன. குறவர் அமைத்த குடில்கள், மலைச்சாரலில் அமைந்த சிற்றூர்கள் போன்றவை சங்க இலக்கியங்களில் சுட்டப்படுகின்றன.

அகநானூறு 12ஆம் பாடலில் குறவர் அமைத்த குரம்பை குறிப்பிடப்படுகிறது. இதன் மூலம் குறிஞ்சி நில மக்களின் குடியிருப்பு அமைப்பைப் பற்றிய செய்தி கிடைக்கிறது. இயற்கைச் சூழலுக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்ட எளிய குடியிருப்புகள் அவர்களின் வாழ்வியல் முறையோடு தொடர்புடையனவாக இருந்தன.

6.2 உணவுப் பழக்கவழக்கங்கள்

குறிஞ்சி நில மக்களின் உணவுப் பழக்கவழக்கங்கள் அந்நிலத்தின் இயற்கை வளங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன. தினை, ஐவன நெல் போன்ற தானியங்கள் உணவாகப் பயன்படுத்தப்பட்டன. மலைப்பகுதிகளில் கிடைத்த தேன், கிழங்குகள், கனிகள் ஆகியவையும் உணவுப் பொருள்களாக விளங்கின.

வேட்டையின் மூலம் கிடைத்த இறைச்சியும் உணவுப் பயன்பாட்டில் இடம்பெற்றது. இதனால் குறிஞ்சி நில மக்களின் உணவுப் பழக்கம் பயிரிடுதல், வேட்டை, இயற்கைச் சேகரிப்பு ஆகியவற்றின் கலவையாக இருந்ததை அறிய முடிகிறது.

6.3 உடை மற்றும் அணிகலன்கள்

சங்க இலக்கியங்களில் தழையாடை, மலர் மாலை, இயற்கைப் பொருள்களால் செய்யப்பட்ட அணிகலன்கள் போன்ற செய்திகள் பல இடங்களில் இடம்பெறுகின்றன. இயற்கை வளங்கள் நிறைந்த குறிஞ்சி நிலத்தில் மலர்கள் மற்றும் தாவரப் பொருள்கள் அழகியல் பயன்பாட்டிலும் இடம்பெற்றன. ஆனால் குறிஞ்சி நில மக்கள் அனைவரும் ஒரே வகையான உடை மற்றும் அணிகலன்களைப் பயன்படுத்தினர் என்று பொதுமைப்படுத்த முடியாது. பாடல்களில் குறிப்பிடப்படும் குறிப்பிட்ட சூழல்களையும் பாத்திரங்களையும் அடிப்படையாகக் கொண்டே இக்கூறுகளை விளக்க வேண்டும்.

6.4 பண்பாட்டு அடையாளங்கள்

குறிஞ்சி நில மக்களின் பண்பாட்டு அடையாளங்கள் இயற்கை, தொழில், வழிபாடு, உறவுமுறை ஆகியவற்றோடு தொடர்புடையன. தேன் சேகரித்தல், தினைப்புனக் காவல், வேட்டையாடுதல், முருக வழிபாடு, வெறியாட்டு போன்றவை அவர்களின்

வாழ்வியலை வெளிப்படுத்துகின்றன. இவ்வாறான பண்பாட்டுக் கூறுகள் சங்க இலக்கியங்களில் நிகழ்ச்சிகளாகவும் உவமைகளாகவும் வருணனைகளாகவும் பதிவாகியுள்ளன. எனவே, குறிஞ்சி நிலப் பாடல்கள் பழந்தமிழர் பண்பாட்டு வரலாற்றை அறிய உதவும் இலக்கிய ஆவணங்களாகத் திகழ்கின்றன.

7. உள்ளுறை உவமையும் இறைச்சியும்

சங்க அகப்பாடல்களின் தனிச்சிறப்புகளில் ஒன்று உள்ளுறை உவமை மற்றும் இறைச்சி ஆகிய அழகியல் உத்திகளாகும். தலைவன், தலைவி ஆகியோரின் காதல் உணர்வுகளை நேரடியாகக் கூறாமல் இயற்கைக் காட்சிகளின் வழியாக உணர்த்துவது அகப்பாடல்களின் சிறப்பாகும்.

மலை, அருவி, விலங்குகள், மலர்கள், பறவைகள் போன்ற இயற்கைக் கூறுகள் மனித உணர்வுகளோடு தொடர்புபடுத்தப்படுகின்றன. இதனால் வெளிப்படையாகக் கூறப்படும் இயற்கைக் காட்சிக்குள் மறைபொருளும் உணர்ச்சிப் பொருளும் அமைந்திருக்கின்றன. குறுந்தொகை மூன்றாம் பாடலில் நிலம், வானம், நீர் ஆகிய இயற்கைக் கூறுகள் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையிலான நட்பின் ஆழத்தை உணர்த்துகின்றன. இங்கு இயற்கை ஒப்பீடு காதலின் அளவிட முடியாத தன்மையை வெளிப்படுத்துகிறது.

அதேபோல் அகநானூறு 12ஆம் பாடலில் புலி, யானை, வேங்கை, பலா, தினைப்புனம் போன்ற இயற்கைக் கூறுகள் தலைவனின் மலைநாட்டுச் சூழலையும், தலைவியின் காதல் உணர்வையும் இணைத்துக் காட்டுகின்றன. இவ்வாறு இயற்கை வருணனை வெறும் அழகியல் கூறாக மட்டுமல்லாமல், அகப்பொருளை வெளிப்படுத்தும் இலக்கிய உத்தியாகவும் விளங்குகிறது.

முடிவுரை

எட்டுத்தொகை நூல்களின் வழியாக ஆராயப்படும் குறிஞ்சி நில வாழ்வியல் பழந்தமிழர்களின் இயற்கை சார்ந்த வாழ்க்கை முறையையும், பொருளாதாரச் செயல்பாடுகளையும், சமூக உறவுகளையும், சமய நம்பிக்கைகளையும், காதல் மரபுகளையும் வெளிப்படுத்துகிறது.

குறிஞ்சி நிலத்தின் மலைகள், அருவிகள், காடுகள், சுனைகள், பாறைகள் ஆகியவை அந்நில மக்களின் வாழ்விடச் சூழலை உருவாக்கின. வேட்டை, தினை பயிரிடுதல், தேன் சேகரித்தல், கிழங்குகளை அகழ்தல் போன்ற தொழில்கள் அவர்களின் வாழ்வாதாரத்தில் இடம்பெற்றன. தினைப்புனக் காவலில் பெண்களின் பங்களிப்பு இருந்ததையும் நற்றிணை 206ஆம் பாடல் எடுத்துரைக்கிறது.

முருக வழிபாடு, வேலன் வெறியாட்டு, பலி கொடுத்தல், செந்தினைத் தூவுதல் போன்ற சடங்குகள் அக்கால மக்களின் சமய நம்பிக்கைகளை வெளிப்படுத்துகின்றன. அகநானூறு 22ஆம் பாடலும் குறுந்தொகை 111ஆம் பாடலும் இத்தகைய வழிபாட்டு மரபுகளையும் அவற்றோடு இணைந்த காதல் வாழ்க்கையையும் விளக்குகின்றன.

களவொழுக்கம், பகற்குறி, இரவுக்குறி, அறத்தொடு நிற்றல் போன்ற அகமரபுகள் குறிஞ்சி நில மக்களின் காதல் வாழ்க்கையை வெளிப்படுத்துகின்றன. தலைவன், தலைவி, தோழி, தாய், தந்தை ஆகிய பாத்திரங்களின் வழியாகக் குடும்ப உறவுகளும் சமூகக் கட்டுப்பாடுகளும் வெளிப்படுகின்றன. அகநானூறு 12ஆம் பாடல் மலைநாட்டு இயற்கையையும் காதலர்களின் உறவையும் ஒருங்கிணைத்துக் காட்டுகிறது.

குறுந்தொகை 3ஆம் பாடல் குறிஞ்சி நிலத்தின் இயற்கை வளத்தையும், மனித உணர்வுகளின் ஆழத்தையும் எடுத்துரைக்கிறது. இவ்வாறு எட்டுத்தொகைப் பாடல்கள் குறிஞ்சி நிலத்தை வெறும் புவியியல் நிலப்பகுதியாக அல்லாமல், இயற்கை, தொழில் சமூகம், சமயம், காதல், பண்பாடு ஆகியவை ஒன்றிணைந்த வாழ்வியல் வெளியாகப் பதிவு செய்துள்ளன. எனவே, குறிஞ்சி நில வாழ்வியலை ஆராய்வதற்கு எட்டுத்தொகை நூல்கள் முதன்மையான இலக்கிய ஆதாரங்களாகத் திகழ்கின்றன. அவற்றில் இடம்பெறும் பாடல்களைச் சூழலோடு ஆராய்வதன் மூலம் பழந்தமிழர்களின் வாழ்வியல் கூறுகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

முதன்மை ஆதாரங்கள்

References

அகநானூறு, உ. வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை.

ஐங்குறுநூறு, பழைய உரையுடன், கழக வெளியீடு, சென்னை.

குறுந்தொகை, உ. வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை.

நற்றிணை, பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் உரை, கழக வெளியீடு, சென்னை.

பொருநராற்றுப்படை, பழைய உரையுடன், கழக வெளியீடு, சென்னை.

பக்தவத்சல பாரதி, தமிழ்கப் படிங்குடிகள், மெய்யப்பன் தமிழய்வுகம், சிதம்பரம், 2003.

மாணிக்கம், வ. சுப., தமிழ்க்காதல், சாரதா பதிப்பகம், சென்னை, 1997.